அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்,
அரண்வாயல் குப்பம்,
திருவள்ளூர் மாவட்டம் - 602 025

சுற்று மடல் எண்: 71 **நாள் : 30.10.2020**

என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

அனைத்துப் புனிதர்களின் பெருவிழா நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்த மாதத்தில்,

வாழ்வின் முடிவில் மனிதன் அடையக்கூடிய
இருவேறு நிலைகளை விழாவாகக் கொண்டாடுகிறோம்.
இந்தக் காலக்கட்டத்தில் வாழ்வின் முடிவைப்பற்றிய
பல்வேறு கருத்துக்கள், வதந்திகள், யூகங்கள், நம்பிக்கைகள்
நம்மிடையே உலவி வருகின்றன.
இவற்றை அறிந்து கொள்ளும் ஆவலில் கிடைத்த செய்திகளையும்
அவை நமக்குத் தரும் பாடங்களையும்
இந்த சுற்றுமடலில் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

சாவு என்பது என்ன? மனிதன் எப்படி இறக்கிறான்?
என்பதற்கான யோகிகளின் விளக்கத்தைத் தெரிந்து கொள்வதானது
நமது உணர்வுகள், உடல், உடலை விட்டு உயிர்பிரிதல்
என்ற புரிதலை ஆழப்படுத்தி நாம் அடைய வேண்டிய இலக்கை
நமக்குத் தெளிவுபடுத்த இயலும்.

மனிதனின் இறப்பென்பது அவன் உடலிலிருந்து வெளியேறும்
5 வாயுக்களால் நிறைவடைகிறது.
அதாவது **பிராணவாயு, சமான வாயு, அப்பானவாயு, உதானவாயு, வியான்னவாயு**
ஆகிய 5 - ம் நம் உடலிலிருந்து வெளியேறிய பின்புதான்
மனிதன் முழுமையாக இறக்கிறான் என்று மகான்கள் அறிவிக்கிறார்கள்
நம் உடலிலிருந்து 5 வாயுக்கள் வெளியேற மனிதனின் இறப்பு நிறைவெய்துகிறது.
இதனை Life force வாழ்வாற்றல் நம்மை விட்டு விலகுதல் என அறிகிறோம்.

மருத்துவ முறைப்படி நமது உடல் சுவாசிப்பதை நிறுத்தும் போது
அதாவது **பிராணன் நின்றுவிடும் போது**
நாம் இறந்தவர்களாக அறிவிக்கப்படுகிறோம்.
ஆனால் இறப்பின் முதல் படிதான் இது.

சமான வாயு உடலை விட்டு விலகும் போது

உடல் அதன் சூட்டை இழக்கிறது.
மூச்சு விடுவது நின்றாலும் உடல் சூடாக இருக்கும் போது
கை, கால்களைத் தேய்த்து சூடேற்றி உயிரைத் தக்க வைக்க முயல்கிறோம்.
உடல் சூட்டை இழக்கும் போது அது விரைத்து கடினமாகிறது.

அப்பான வாயு உடலைவிட்டு நீங்கும் போது

உடலின் உணர்வுகள் (Sensory activity) நின்று விடுகின்றன.
சில சமயங்களில் இறந்த பின்னும் உடலில் துடிப்பு இருக்கும்.
அப்பான வாயு வெளியேறும்போது துடிப்பு நின்றுவிடும்.

நான்காவது **உதான வாயு நீங்கும் போது** உடல் பளுவாகிறது.
நாம் எத்தனை பருமனாக இருந்தாலும் அந்தப் பளுவை
நம் உடலில் உணர்வதில்லை.
அதற்குக் காரணம் நம் உடலில் உள்ள உதான வாயுதான்.
எனவேதான் இறந்த உடல் கனமாகிறது.
'பிணம் மாதிரி கனக்கிறது' என்ற சொல்லடை
நம் மக்களிடையே உண்டல்லவா?

இறுதியாக உடலை விட்டுச் செல்வது **வியான்ன வாயு**.
அது வெளியேறிய உடன் உடல் மெதுவாக அழுகிப் போக ஆரம்பிக்கிறது.

இந்த 5 நிலைகளும் கடந்த பின்தான் இறப்பு முழுமை பெறுகிறது.
அப்போது நம் உடலை விட்டு ஆன்மா வெளியேறுகிறது.
இவ்வாறு நம் உடலை விட்டு வெளியேறும் ஆன்மா
உடலைச் சுற்றியே வந்து கொண்டிருக்குமாம்.
உடல் நிரந்தரமாக இல்லை என்ற நிலை வந்ததும் (அடக்கம் அல்லது எரித்தல் வழியாக)
ஆன்மா தன் tendency (இயல்பில்) பயணிக்க ஆரம்பிக்கிறது.
இங்கு தான் நாம் ஒன்றை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.
உடலோடு ஆன்மா இருக்கும் வரை
பல சமயங்களில் அது தன் discriminatory intelligence
அதாவது நமது பகுத்தறிவைக் கொண்டு நம் இயல்பை மாற்ற இயலும்.

உதாரணமாகச் சொன்னால் நமக்குக் கோபம் வருகிறது.
நல்லா அடிக்க வேண்டும் போல் தோன்றுகிறது.
பகுத்தறிவைக் கொண்டு இடம், காலம், சூழ்நிலையை
ஆய்வு செய்து அமைதியாகிவிடுகிறோம்.

ஆனால் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்து விடும்போது
அது தன் இயல்பில் பதிவாகியுள்ள உணர்ச்சிகளின் அடிப்படையிலேயே செயல்படுகிறது.
ஆன்மாவில் தூய்மையான எண்ணமும், அன்பு செய்யும் இயல்பும் பதிந்திருந்தால்
அது அதனை நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கிறது.
ஆன்மாவில் வெறுப்பும், குரோதமும் பதிவாகியிருந்தால்
அது வெறுப்புக்குரிய குரோதமான செயல்களிலேயே நிலைபெற்று அலையும்.
திருப்தியற்ற ஆன்மா, ஏக்கமான ஆன்மா,
நிறைவேறாத ஆசைகள் கொண்ட ஆன்மா அதைச் சுற்றியே அலையும்.

கடவுளை நோக்கிய ஆன்மா ஒளியை நோக்கித் தன் பயணத்தைத் தொடரும்.
தெளிவும், ஒளியும் கொண்டு கடவுளை சந்திக்கத்
தன் யாத்திரையை ஆன்மா தொடங்குகிறது.

எனவே நம் ஆன்மாவை நன்மைத்தனத்தில் நிலைபெற்றிருக்கும்படிப்
பயிற்சி செய்வது மிகமிக அவசியம்.
இவ்வுலகில் நிறைவின்றி வாழ்வோர் கடவுளிடம் நிறைவைப் பெற்றுக் கொள்வோம்
என்று குறிப்பிடுவதைக் கேட்டிருக்கிறோம்.
ஆனால் உண்மையில் நிறைவின்றி நம் ஆன்மாவை அலைக்கழிப்போமானால்
நிரந்தரமாக நாம் அதற்குத் தீமை செய்கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.
எந்த சூழலும் நம்மை நிறைவற்ற, வெறுப்பான, கோபமான, பகைமையான
மனநிலைக்குத் தள்ளாதவாறு கவனமாக இருக்க வேண்டும்.
அப்போதுதான் நம் ஆன்மாவில் பதியவைக்கப்படும் பதிவுகள்
அன்பு, மகிழ்ச்சி, நிறைவு, இறைஉணர்வு ஆகிய நீடித்த நலன் பயக்கும் பதிவுகளாகும்.
இந்த பதிவுகள்தான் நம்மை அனைத்து புனிதர்களின் நிலைக்கோ
ஆன்மாக்களின் நிலைக்கோ கொண்டு செல்லும் என்பதை உணர்வோம்.

நம் வாழ்வின் இரகசியங்களை உணர்ந்துகொள்வதற்கான மாதம் இது.
இதில் ஆழமான உள்ளுணர்வு கொண்டவர்களாய்
நம் ஆன்மாவின் குழப்பங்களை சரிசெய்வோம்.
இந்த மானுடப் பிறவியே நாம் புனிதநிலைக்குக் கடந்து செல்வதற்கான பிறப்பு
இந்த பிரபஞ்சத்தின் உயிரினங்கள் எல்லாம்
தங்கள் உடல் தேவைகளுக்காக மட்டுமே வாழ்கின்றன.
மனிதர்களாகிய நாம் மட்டும் தான் நம் தேவைகளைக் கடந்து
புனிதத்திற்குள் நம்மை உயர்த்திக் கொள்ள இயலும்.
ஒருவேளை நாமும் உடல் தேவைகளுக்காக வாழ்பவர்களாய் இருந்தால்
இன்னும் விலங்கின் நிலையைக் கடக்கவில்லை என்று தானே பொருள்.

அப்படியானால் உடல் தேவைகள் அவசியமில்லை என்று சொல்வோமா?
அவசியம் தான். ஆனால் அவையேதான் முக்கியம்
அவைகளுக்காகவே குழுமங்களில் முறுமுறுப்போம், சண்டையிடுவோம்,
புறங்கூறுவோம் என்று சொன்னால் நம் நிலை பரிதாபமானது.
நமக்கு கிடைத்திருக்கின்ற அனைத்திற்காகவும் நன்றி சொல்லி வாழ்வோம்.
அப்போது பஞ்சபூதங்களால் ஆன இந்த உடல்
நம் ஆன்மாவிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் போது
நம் ஆன்மா எந்தக் கலக்கமும் குழப்பமும் இல்லாமல்
ஒளியை நோக்கி தீர்க்கமாகப் பயணிக்க இயலும்.

அனைத்து புனிதர்களும் ஒளியை நோக்கி தீர்க்கமாகப் பயணித்தவர்களே.
இந்த உடலின் அனுபவங்களை அவை நோயாக இருந்தாலும்
அவமானமாக இருந்தாலும் இல்லாமையாக இருந்தாலும்
புறக்கணிக்கப்படுதலாக, ஒதுக்கப்படுவதாக எதுவாக இருந்தாலும்
எந்த சலனமும், சலிப்பும், முறைப்பாடும் இன்றி நிறைவாகக் கடந்தவர்கள்
எனவேதான் இன்று அவர்கள் புனிதர்களாய் இருக்கின்றார்கள்.

ஆன்மா ஒளியை நோக்கி இறுதிப் பயணம் செய்ய
வாழும் போதே ஆன்மாவைப் பயிற்றுவித்தவர்கள் இவர்கள்.
நான் செபிக்கிறேன், செபிக்கிறேன் என்று நம்மில் பலர் சொல்கிறோம்.
நமது செபங்கள் நம் ஆன்மாவில் பதிந்திருந்தால்
எப்படி நம்மால் அன்பின்றிப் பேச இயலும்?
பிறரை வெறுக்க இயலும்?
வாழும் இடங்களில் குழப்பத்தைத் தோற்றுவிக்க இயலும்?

அன்புக்குரியவர்களே!

வயது வளர வளரவும் நாம் இன்னும் ஒளியின் வழித்தடங்களை
ஆன்மாவில் பதியவிடாமல் இன்னும் திசைதெரியாமல்
அலைக்கழிக்கப்பட்டு வாழ்வது மிகுந்த கவலை தருகிறது.
ஒரு துறவிக்கு இந்த நிலை வேதனைக்குரியது.
ஒன்றை புரிந்துகொள்வோம்
நாம் வாழும் இடத்தில் குழப்பங்களைத் தோற்றுவித்தால்
நம் ஆன்மாவில் குழப்பங்கள் தான் பதிவாகி இருக்கிறது என்று பொருள்.
பகைமையைத் தோற்றுவித்தால் பகைமை பதிவாகியிருக்கிறது.
வெறுப்பைத் தோற்றுவித்தால் வெறுப்பு பதிவாகியிருக்கிறது.

நிறைவின்மையைத் தோற்றுவித்தால் நிறைவின்மை பதிவாகியிருக்கிறது.
அடுத்தவரை இழிவாக நோக்குவோர் ஆன்மாவில் அகந்தை பதிவாகியிருக்கும்.
அன்பு, மன்னிப்பு, கருணை, கரிசனை, பெருந்தன்மை,
மரியாதை, மதிப்பு, மகிழ்ச்சி, மனநிறைவு ஆகியவற்றை வெளிப்படுத்துவோரின்
ஆன்மாவில் ஒளி பதிவாகியிருக்கிறது எனப் புரிந்து கொள்வோம்.
ஒளிபதிவாகியுள்ள ஆன்மா ஒளியோடு நிரந்தரமாகக் கலந்துவிடும்.

தாகூரின் கவிதை வரிகளை நினைவு கூர்வோம்

உன் ஒளித் திருநாள் நடனமதைக் கண்டு
என் சிறு இதயம் களிகூறும்
மன்னவன் உன்முக ஒளி சிதறும்
எழில் புன்னகையோடு எந்தன் வாழ்வினையும்



அந்த நாளுக்காக ஆவலோடு பயணிக்க அன்போடு உங்களை வாழ்த்துகிறேன்.

சகோதரிகளே கவனியுங்கள்!

- ஏற்கனவே நான் அறிவித்திருந்தாலும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். வெளியே சென்று வரும் சகோதரிகள் உங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாகச் செய்து கொள்ளுங்கள். அவசியமின்றிப் பயணங்களைத் தவிர்த்து விடுங்கள்.

- மிகுந்த எச்சரிக்கையோடுதான் இல்லப்பார்வையை மேற்கொள்கிறோம். சில சகோதரிகள் இல்லப்பார்வை தேவையில்லை என்றும் நினைக்கலாம். ஆனால் சபை எனக்குக் கொடுத்த பணியை செய்யாமல் இருக்க இயலாது. இதற்காகவே இந்தப்பணியை மேற்கொள்ளுகிறோம். எனவே கால நிலை, சூழல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நான் இல்லப்பார்வைக்கு வரும் இல்லங்களை உங்கள் மாநிலத் தலைமைச் சகோதரி வழியாய் தெரிவிக்கின்றேன்.

- கூட்டமாகக் கல்லறைத் தோட்டங்களுக்குச் செல்ல வேண்டாமென அரசு அறிவித்துள்ளது. முடிந்த அளவு அதனைக் கடைபிடிப்போம்.இந்த மாதத்தின் மற்ற நாட்களில் கல்லறை சந்திக்கச் செல்வோம்.

- நவம்பர் 1 அன்று நம் இல்லத்தில் உள்ள அனைத்து சகோதரிகளின் நாம விழாவைச் சிறப்பிக்கின்றோம். ஒவ்வொரு சகோதரிக்கும் தனிப்பட்ட முறையில் என் அன்பையும் செபத்தையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றேன். நாம் அனைவரும் புனிதராக ஒளியோடு இணைய வேண்டும். என்பதே என் பேராவல். அன்புக்குரிய நீங்கள் ஒவ்வொருவரும் ஒளியாய் மிளிர ஆத்மார்த்தமாய் வேண்டுகிறேன்.

சபைத் தலைமை அன்னையின் நவம்பர் மாதப் பணித்திட்டம்

01 - அனைத்துப் புனிதர்களின் பெருவிழா – தலைமையகம்

02 - அனைத்து ஆன்மாக்களின் நாள் – தலைமையகம்

03 - கல்லறை சந்திப்பு

04 - 05 - மைய ஆலோசனைக்குழு மதிப்பீட்டாய்வு – தலைமையகம்

06 - முடிச்சூர் இல்லப்பார்வை

07 - Online Meeting – Superior Generals' Executive Meet - Rome

08 - 09 - சபைத் தலைமையக இல்லப் பார்வை

10 – 11 - Online Meeting – Superior Generals' Executive Meet - Rome

12 - தனி செப நாள்

13 - 14 - Online Meeting – TNCRI ANNUAL ASSEMBLY

15 - கருத்தமைதி நாள்

16 - 30 - காலச்சூழல் சாதகமாக இருக்கும் பட்சத்தில் தஞ்சை மாநில இல்லங்கள் சந்திப்பு

அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்

Sr. Maria Lilani FBS

சபைத் தலைமை அன்னை